<u>முதன்மை சார்பு நீதிமன்றம், செய்யாறு, திருவண்ணாமலை மாவட்டம்.</u>

எம்.சி.ஓ.பி. எண். 10/2024

| | | |
|---|---|---|
| மனுதாரர் தரப்பு சாட்சி | .. | 1 |
| பெயர் | .. | ராஜம் |
| தகப்பனார் / கணவர் பெயர் | .. | பழனி |
| வயது | .. | 53 |
| தொழில் | .. | |
| கிராமம் | .. | மாமண்டூர் |
| வட்டம் | .. | வெம்பாக்கம் |

2025 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 22ஆம் நாள் திங்கட்கிழமை திரு. நா. சுரேஷ், எம்.எல்., முதன்மை சார்பு நீதிபதி, செய்யாறு அவர்களின் முன்னிலையில் உரிமையியல் நடைமுறைச்சட்டம் மற்றும் விதிகளின் படி உறுதி செய்யப்படுகிறது.

முதல் விசாரணை

மனுவில் மனுதாரர். எனது சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விவரங்கள் என்னால் சொல்லப்பட்டது. நிரூபண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்துக்கள் என்னுடையதுதான். எனது தரப்பில் கீழ்கண்ட ஆவணங்களை தாக்கல் செய்கிறேன். முதல் தகவல் அறிக்கை நகல் ம.த.சா.ஆ.1, பிரேத பரிசோதனை அறிக்கை நகல் ம.த.சா.ஆ.2, வாகன பதிவுச்சான்று நகல் ம.த.சா.ஆ.3, வாகன காப்பீட்டு சான்று நகல் ம.த.சா.ஆ.4, மனுதாரர் ஆதார் அட்டை நகல் ம.த.சா.ஆ.5, முத்து என்பவர் இறப்பு சான்று நகல் ம.த.சா.ஆ.6, இறந்துபோன முத்து வாரிசு சான்று நகல் ம.த.சா.ஆ.7, இறந்துபோன முத்து லோட்டஸ் புட்வேர் கம்பெனியில் பணிபுரிந்ததற்கான அடையாள அட்டை நகல் ம.தா.சா.ஆ.8, இறந்துபோன முத்து

என்பவர் கண்தானம் செய்யப்பட்டதற்கான சான்று நகல் ம.த.சா.ஆ.9, இறந்துபோன முத்து அடையாள அட்டை நகல் ம.த.சா.ஆ.10, இறந்துபோன முத்து என்பவரின் சம்பவள பட்டியல் நகல்கள் ம.த.சா.ஆ.11. ( ம.த.சா.ஆ.10 மற்றும் 11 ஆவணங்கள் எதிர்மனுதாரர் தரப்பில் ஆட்சேபனைக்குட்பட்டு குறியீடு செய்யப்படுகிறது)